18.06.2026
O.S.No. 155/2023
P.W. 1 – முத்துக்குமார் த/பெ.ராமு
சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் :

1. பிரதிவாதி உங்களுக்கு என்ன உறவு என்றால் எனது மனைவியின் சகோதரர் ஆவார். உங்களது மாமனார் பெயர் ராசு தேவர் என்றால் சரிதான். மேற்படி ராசு தேவருக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் பொட்டக்கோட்டை. நீங்களும் அதே ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 8 சொத்துக்கள். ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் O.S.137/2009 என்ற வழக்கு உங்களுக்கும் இதே பிரதிவாதிக்கும் இடையே நடந்தது என்றால் சரிதான். மேற்படி O.S.137/2009 வழக்கில் நீங்கள் பிரதிவாதியாகவும், காசிநாதன் வாதியாகவும் இருந்தார் என்றால் சரிதான். O.S.137/2009 வழக்கில் நீங்கள் எதிர் கோரிக்கை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் நீங்கள் சொல்லியுள்ள 26.08.2008ம் தேதிய உயிலை பொருத்து மேற்படி O.S.137/2009 வழக்கில் நீங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொல்லியுள்ள மேற்படி உயிலை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் நீங்கள் உயிலை தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்ததாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. உயில் யாரிடம் உள்ளது என்றால் எனது மனைவியின் சகோதரியிடம் உள்ளது. நீங்கள் இவ்வழக்கை காசிநாதனுக்கு எதிராக தாக்கல் செய்த விவரம் உங்கள் மனைவியின் சகோதரிக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி இவ்வழககு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது மனைவியுடன் சேர்த்து 3 பெண் பிள்ளைகளுக்கும் பாகம் கொடுக்காததால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன், மேற்படி 3 நபரில் ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் அவரை நான் தான் பராமரித்து வருகிறேன். மேற்படி 3 பெண் பிள்ளைகளின் பெயர்கள் என்ன என்றால் 1. சுந்தரி, 2, சந்திரா, 3. செல்வி ஆகும். மேற்படி 1. சுந்தரி, 2, சந்திரா, 3. செல்வி ஆகியோர் இவ்வழக்கில் தரப்பனர்களாக இல்லை என்றால் சரியல்ல, தரப்பினர்களாக இருக்கிறார்கள். மேற்படி 1. சுந்தரி, 2, சந்திரா, 3. செல்வி ஆகியோர் எங்களுக்கு பாகம் பெற்றுக் கொடுங்கள் என உங்களுக்கு அதிகார ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளார்கள்.

4. பிரதிவாதிக்கு எதிராக நீங்கள் தனிப்பட்ட முறையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும், மேற்படி 1. சுந்தரி, 2, சந்திரா, 3. செல்வி ஆகியோரின் அதிகார முகவர் என்ற முறையில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். உங்களுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் அதிகார ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் சொத்து உங்களுக்கு பாத்தியம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பில் கேட்டுக் கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

(ஓம்/திருமதி.S.ரேவதி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை